**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.26/2025**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா, அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜுலை மாதம் 28 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ரமேஷ் பாபு | மதம் | : இந்து |
| த/பெ | : சுப்பிரமணி | ஜாதி | : -- |
| வயது | : 43 | கிராமம் | : முருகூர் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**28.07.2026**
**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

5. 18.02.2025 ஆம் தேதியிட்டு என் தாய்மாமா வெங்கடேசன் கொடுத்த புகார் மனு கைநகல் தாக்கல் செய்கிறேன். **(புகார் மனு வா.சா ஆ 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 12.03.2025 ஆம் தேதியிட்டு என் தாய்மாமா வெங்கடேசன் கொடுத்த புகார் மனு கைநகல் தாக்கல் செய்கிறேன். **(புகார் மனு வா.சா ஆ 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 18.02.2025 ஆம் தேதியிட்டு என் தாய்மாமா வெங்கடேசன் கொடுத்த புகார் மனு கைநகல் தாக்கல் செய்கிறேன். **(புகார் மனு வா.சா ஆ 16 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

6. வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். **(நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ1 ஆகவும் வரைபடங்கள் நீ.ம.சா.ஆ 2, நீ.ம.சா.ஆ 3 ஆகவும் நில அளவையர் அறிக்கை நீ.ம.சா.ஆ 4 ஆகவும் நில அளவையர் வரைபடம் நீ.ம.சா.ஆ 5 ஆகவும் புகைப்படங்கள் (10 எண்ணம்) மற்றும் தகவல் சேமிப்பு கருவி (pindrive) நீ.ம.சா.ஆ 6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)** வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)